மின்னல் ஊராட்சிதனிஅலுவலர்/வட்டாரவளர்ச்சிஅலுவலர்(கி.ஊ), அவர்களின் செயல்முறைகள்

முன்னிலைதிரு.எஸ்.பாஸ்கரன்.,

ந.க.அ5/949/2021

நாள் : .06.2020

| | |
|---|---|
| பொருள் : | அனுமதியற்ற மனைப்பிரிவு - வரன்முறைபடுத்துதல் திட்டம் 2017-அரக்கோணம் ஊராட்சிஒன்றியம் - மின்னல் ஊராட்சி-கிராம சர்வே எண்கள்- 758/1(ப), 759/1, 2, 760/6-ல் 8.45 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரி வரன்முறைப்படுத்தி ஒப்புதல் வழங்கிஉத்தரவிடப்பட்டுள்ளது - விற்கபடாத 93 மனைகளுக்கு மட்டும் வரன்முறைப்படுத்தி அனுமதி அளித்து உத்தரவிடுதல் - தொடர்பாக. |
| பார்வை : | 1.அரசாணை எண்:255, ஊரகவளர்ச்சி (ம) ஊராட்சிதுறை நாள்:18.08.1997.<br>2.அரசாணை எண்: 78, வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சிதுறை ந.வ4(3) நாள்: 04.05.2017.<br>3.அரசாணை எண்: 172, வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சிதுறை ந.வ 4(3) நாள்: 13.10.2017.<br>4.ராணிப்பேட்டை மாவட்டம், இணைஇயக்குநர் / உதவிஇயக்குநர்(பொ), மாவட்டநகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின் கடிதம் ந.க.எண்:670/2020//ரா.மா, நாள்:04.03.2021.<br>5.அரக்கோணம், மண்டலம் துணைவட்டாரவளர்ச்சிஅலுவலரின்(ம-4) ஸ்தலஆய்வு அறிக்கைநாள்:23.06.2021.<br>6.மின்னல்ஊராட்சிமன்றபல்வகைரசீதுஎண்:118,நாள்:29.06.2021<br>7.மின்னல்ஊராட்சிமன்றத்தீர்மானஎண்:45, நாள்:29.06.2021 (அங்கீகரிக்கப்பட்டது). |

******

**உத்தரவு:-**

அரக்கோணம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மின்னல் ஊராட்சி கிராம சர்வே எண்கள்- 758/1(ப), 759/1, 2, 760/6-ல் 8.45ஏக்கர்பரப்பளவில் பார்வை 4-ல் காணும் ராணிப்பேட்டை மாவட்டநகர் ஊரமைப்பு இணை இயக்குநர் / உதவிஇயக்குநர்(பொ), அவர்களின் கடிதத்தின் படியும், ராணிப்பேட்டை மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் / உதவி இயக்குநர்(பொ) அவர்களின் வரன்முறைப்படுத்துதல் எண்.18(R)/2021 எனஎண்ணிடப்பட்டு நிபந்தனைகளின்படியும் விற்கப்படாத 93 மனைகளுக்குமட்டும் வரன்முறை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2 மற்றும் 3-ல் காணும் அரசாணைகளின்படி மின்னல் ஊராட்சிக்கு பொது உபயோக ஒதுக்கீடு திறவிடமாக (OSR) பூங்காஒதுக்கீடு 7010.00 சதுரடி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவணஎண்: 831/2021, நாள்: 23.02.2021-ன் படி உதவிஇயக்குநர், மாவட்டநகர் ஊரமைப்பு துறை, ராணிப்பேட்டை மாவட்டம் அவர்களுக்கு தானப்பத்திரம் பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது. மேலும் சாலைகள் 95920.00 சதுரடி அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்: 3295/2012, நாள்: 28.03.2012-ன் படி அரக்கோணம் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஏற்கனவே ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

(கனிவுடன் திருப்புக)

மேலும் வரன்முறைப்படுத்துதல் கட்டணமாக சதுரமீட்டர் ஒன்றுக்கு ரூ.30/- வீதம் அரசு தலைப்பில் DPC-0217-60-800-AT2730 மூலம் விற்கப்படாத 93 மனைகளின் பரப்பளவு 5774.62 சதுரமீட்டருக்கு ரூ.173238.60/- நாள்: 29.06.2021 அன்று அரக்கோணம் சார் கருவூலம் மூலம் செலுத்தப்பட்டுள்ளது.

வளர்ச்சி கட்டணமாக சதுரமீட்டர் ஒன்றுக்கு ரூ.25/- வீதம் மேற்படி 93 மனைகளின் பரப்பளவு 5774.62 சதுரமீட்டருக்கு ரு.144365.50/- நாள்: 29.06.2021அன்று மின்னல் ஊராட்சி பொது நிதியில் (பல்வகை ரசீது எண்: 118, நாள்:29.06.2021) செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, பார்வை7-ல் காணும் மின்னல் ஊராட்சி மன்றத் தீர்மான எண்: 45 நாள்:29.06.2021 (அங்கீகரிப்பட்டது)-ன் படியும், பார்வை 4-ல் காணும் கடிதத்தின் படியும் மனைப்பிரிவு வரைபடத்தில் இவ்வலுவலக அனுமதியின்றி எவ்வித மாற்றமும் செய்யக் கூடாது. மாற்றம் செய்யப்படின் இவ்வுத்தரவு தானாக இரத்து செய்யப்படுமெனவும், மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு விற்கப்படாத கீழ்கண்ட 93 குடியிருப்பு மனைகளுக்குமட்டும் வரன்முறைப்படுத்தி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

<u>மனைகள் விவரம்:</u>

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 4 | 7 | 8 | 10 | 14 | 20 | 22 | 23 | 24 | 25 | 26 | 43 | 47 |
| 56 | 57 | 58 | 60 | 74 | 91 | 92 | 94 | 97 | 114 | 117 | 118 | 119 | 164 | 172 |
| 181 | 189 | 192 | 197 | 198 | 201 | 202 | 207 | 208 | 209 | 219 | 220 | 221 | 223 | 232 |
| 233 | 234 | 243 | 244 | 245 | 259 | 264 | 271 | 298 | 310 | 313 | 314 | 315 | 319 | 320 |
| 321 | 324 | 325 | 327 | 328 | 329 | 330 | 340 | 341 | 342 | 343 | 344 | 346 | 351 | 357 |
| 358 | 359 | 360 | 378 | 403 | 404 | 408 | 409 | 413 | 418 | 419 | 420 | 421 | 422 | 424 |
| 425 | 427 | மற்றும் | 432 | | | | | | | | | | | |

தனிஅலுவலர்/
வட்டாரவளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
மின்னல் ஊராட்சி, அரக்கோணம்.

**பெறுநர்:**
திரு.என்.எம்.சண்முகம்,
நெ.4/26.பாரிநகர் காலனி,
முதல் குறுக்குதெரு, கொளத்தூர்,
சென்னை-600 099.

**நகல் பணிவு:**
1.உதவிஇயக்குநர் (ஊராட்சிகள்),
இராணிப்பேட்டை.
2.இணை இயக்குநர்/உதவிஇயக்குநர்(பொ),
மாவட்டநகர் ஊரமைப்பு அலுவலகம்,
நவல்பூர், இராணிப்பேட்டை.

**நகல்:**
1.சார் பதிவாளர்,
சார் பதிவாளர் அலுவலகம், அரக்கோணம்.
2. ஊராட்சி செயலர், மின்னல்ஊராட்சி,
ஊராட்சி ஒன்றியம், அரக்கோணம்.